## நல்லூர் பிரதேச சபை

## யாழ்ப்பாணம் மாவட்டம்

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களினை சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 27 மார்ச் 2019 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 30 யூன் 2019 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 31 ஒக்ரோபர் 2019 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து நிதிக்கூற்றுக்களில் 2018 திசெம்பர் 31 இல் நல்லூர் பிரதேச சபையின் நிதி நிலைமை அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலிலும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையானதும் நியாயமானதுமான நிலையை தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**கணக்கீட்டு கொள்கைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபையினால் நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்காக பின்பற்றப்பட்ட கணக்கீட்டு கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப் பட்டிருக்கவில்லை. | கணக்கீட்டுகொள்கைகள் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். | பதில் வழங்கப்பட்டிருக்க வில்லை |

1.4 இணக்கமின்மைகள்

1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) 1987ஆம் ஆண்டு 15ஆம் இலக்க பிரதேசசபைகள் சட்டம் | | | |
| (i) பிரிவு 126 (VII) | விளம்பரப் பலகைகளினதும் வேறு தற்காலிக கட்டமைப்புக்கள் தொடர்பிலும் எவையேனும் அனுமதிப் பத்திரங்களுக்கான கட்டணங்களை இறுத்தல் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய சட்டத்தின் அறிவுறுத்தல்களுக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். | நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. |
| (ii) பிரிவு 158 (1) | ஆதனவரி நிலுவை செலுத்தத் தவறியோருக்கு தவிசாளரினால் பற்றாணைச்சீட்டு வழங்கப்பட்டிருக்கவில்லை. | உரிய சட்டத்தின் அறிவுறுத்தல்களுக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும் | உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| (ஆ) 1988 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி,நிருவாக விதிகள் | | | |
| அத்தியாயம் X இன் பிரிவு 193 | மீளாய்வாண்டிற்கான உள்ளபடியான வருமானம் மற்றும் செலவு தொடர்பான விபரங்கள் வரவு செலவுத் திட்டத்துடன் ஒப்பிடப்பட்டு முரண்பாட்டுக்கான விளக்கங்களை உள்ளடக்கிய கூற்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய விதிகளின் அறிவுறுத்தல்களுக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். | எதிர்காலத்தில் இந்த ஒப்பீடுகள் நிதிக்கூற்றுக்களின் இணைப்புக்களாக வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். |
| (இ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கத்தின் நிதி ஒழுங்கு விதிகள் | | | |
| (i) நிதி ஒழுங்கு விதி இலக்கம் 371 | கடந்த 05 வருடங்களிற்கு மேலாக 02 வேலைகள் தொடர்பான ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்ட முற்பணங்கள் தீர்வு செய்யப்படாமலுள்ளது. | உரிய நிதி ஒழுங்கு விதிகளின் அறிவுறுத்தல்களுக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். | நீதிமன்றில் வழக்கு மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ii) நிதி ஒழுங்கு விதி இலக்கம் 571 | இரண்டு வருடங்களிற்கு மேற்பட்ட ஒப்பந்தகாரர் வைப்பு மீதி தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | உரிய நிதி ஒழுங்கு விதிகளின் அறிவுறுத்தல்களுக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். | வைப்புக்கள் தொடர்பில் உரிய நடவடிக்கை மேற்கொண்டு அறிக்கையிடப்படும். |

**1.4.2 வரித் தேவைப்பாடுகளுடன் இணங்காமை**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு செலுத்தப்பட வேண்டிய ரூபா 561,941 வரித்தொகையும் அதற்கான தண்டப்பணம் ரூபா 447,952 வும் பிரதேச சபையினால் செலுத்தப்படவில்லை. | உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு செலுத்தப்பட வேண்டிய வரித்தொகையிற்கு உரிய ஆலோசனைகள் பெறப்பட்டு தீர்வு காணப்படல் வேண்டும். | உரிய நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | பிரதேச சபையின் பயன்பாட்டிலுள்ள 06 வாகனங்களுக்கு குறிப்பிட்ட ஆண்டு வருடாந்த வரித்தொகை மோட்டார் வாகனத் திணைக்களத்திற்கு செலுத்தப்பட்டிருக்கவில்லை. | வரித்தொகையை உரிய காலத்தில் மோட்டார் வாகனத் திணைக்களத்திற்கு செலுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | உரிய நடவடிக்கை எடுக்கப்படும். |
| (இ) | 1987 ஆம் ஆண்டின் 15 இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 154 ஆம் பிரிவின் பிரகாரம், குறித்த சில காணிகளின் விற்பனை மீது 1% சதவீத விற்பனை வரி அறிவிடப்படவேண்டிய போதிலும், சபையினால் அவற்றினை அறவிடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | விற்பனை வரியினை அறவிடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். | எதிர்காலத்தில் குறித்த விடயம் தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 36,175,857 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 110,771,569 தொகையாக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளுக்குரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் * | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் * | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் |
| ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 2,770,000 | - | 2,615,823 | 6,912,056 | 2,615,000 | - | 2,600,466 | 6,879,628 |
| வாடகைகள் | 34,513,760 | - | 34,551,173 | 961,238 | 28,585,000 | - | 30,103,144 | 960,238 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 3,420,000 | - | 3,647,358 | 48,000 | 3,248,700 | - | 3,442,528 | 28,000 |
| ஏனைய வருமானம் | 129,022,790 | - | 94,000,109 | 40,140,428 | 108,764,324 | - | 153,429,111 | 214,646,444 |
| | **169,726,550** | **-** | **134,814,463** | **48,061,722** | **143,213,024** | **-** | **189,575,249** | **222,514,310** |

* பட்டியலிடப்பட்ட வருமானம் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2017 ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 189,575,249 ஆக இருந்த போதிலும் 2018 ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 134,814,463 ஆக குறைவடைந்துள்ளமையால் 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2018 ஆம் ஆண்டில் வருமான சேகரிப்பின் செயலாற்றல் ரூபா 54,760,786 இனால் குறைவடைந்திருந்தது. எனினும் பட்டியல்படுத்தப்பட்ட வருமானத்தை உறுதிப்படுத்தமுடியாதுள்ளது. | பட்டியல்படுத்தப்பட்ட வருமானத்தினை உறுதிப்படுத்தல் வேண்டும். | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை |
| (ஆ) | சபையினால் கடந்த 05 வருடங்களாக வருமானம் பட்டியலிடப்பட்டிருக்காமை வருமான சேகரிப்பின் வினைத் திறனின்மையை வெளிப்படுத்துகின்றது. | 05 வருடங்களிற்குரிய பட்டியல்படுத்தப்பட்ட வருமானத்தினை தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | எதிர்காலத்தில் உரிய வகையில் வருமானங்கள் பட்டியலிடப்பட்டு சமர்ப்பிக்கப்படும். |

### 2.2.3 வீதவரி

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டிறுதியில் ரூபா 2,583,823 பெறுமதியான 19,594 எண்ணிக்கையான ஆதனங்களின் வீதவரி நிலுவை அறவிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | ஆதனங்களின் வீதவரி நிலுவை அறவிடப்படல் வேண்டும். | தொடர்ந்து நிலுவைகள் அறவிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். |

### 2.2.4 வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டில் சந்தைக்கடை வாடகை நிலுவை கூட்டுமொத்தம் ரூபா 544,574 சபையினால் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சபையினால் வாடகை நிலுவை அறவிடப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | ரூபா 544,574 காலங்கடந்த வருமான நிலுவை ஆகும். இதனை பதிவழிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |

### 2.2.5 அனுமதிப்பத்திரக் கட்டணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| தொலைத்தொடர்பு கோபுரங்களுக்கான அனுமதிக் கட்டணம் ரூபா 200,000 இனை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கோபுரங்களுக்கான அனுமதிக்கட்டணங்களினை அறவிடப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். | சட்டரீதியான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் |

### 2.2.6 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மாகாண சபையின் பிரதம செயலாளர் மற்றும் அனைத்து அதிகாரிகளிடமிருந்து 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 855,000 தொகையான நீதிமன்ற | நிலுவையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |

தண்டப்பணம் மற்றும் ரூபா 15,678,611 தொகையான முத்திரைக் கட்டணங்கள் பெறப்பட வேண்டியிருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம், பொதுச் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வழிகள், மற்றும் மக்களின் சுகாதாரம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

**(அ) உப விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பிரிவின் பிரகாரம், 30 முக்கிய விடயங்கள் தொடர்பில் உபவிதிகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் அனைத்து விடயங்களும் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | குறிப்பிடப்பட்ட அனைத்து விடயங்களையும் நடைமுறைப் படுத்துவதற்கான உபவிதிகளை உருவாக்குவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். | உபவிதிக்கான விடயங்களை முழுமையாக அமுல்படுத்த எதிர்காலத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

**(ஆ) செயல் நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபையினால் செயல்படுத்தப்பட்டிருக்க வேண்டிய 30 செயற்பாடுகள் தொடர்பில் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | உப விதிகளுக்கிணங்க வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும். | செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

**(இ) எதிர்பார்க்கப்பட்ட விளைவுகளினை (Out come) அடைவதற்கு தவறியமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| செயல்நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட குந்தன்புலம் காணி கொள்வனவுக்கு ரூபா 5,354,000 தொகையொன்று ஏற்பட்டதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட விளைவுகளினை அடைந்து கொள்ள முடியாதிருந்தது. | குறித்த ஆதனத்திற்குரிய பாதையினை உருவாக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். | இவ்வாண்டு இறுதிக்குள் பாதையினை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படும். |

**(ஈ) பணிகளை நிறைவேற்றலின் தாமதங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பதினொரு செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் அச்செயற்பாடுகளின் செயலாற்றலில் தாமதங்கள் அவதானிக்கப்பட்டன. | குறிப்பிட்ட செயற்பாடுகளை உரிய காலத்தில் முடிவுறுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். | குறிப்பிட்ட வேலைகளுக்கு ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய காரணங்களுக்காக கால நீடிப்பு வழங்கப்பட்டதுடன் மேலதிக நாட்களுக்கு தண்டமும் அறவிடப்பட்டது. |

**(உ) திண்மக் கழிவு முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (i) | பிரதேச சபையினால் திண்மக்கழிவு பணிகளில் ஈடுபடுத்தப்படும் 43 சுகாதாரத் தொழிலாளர்களுக்கும் வருடாந்தம் மேற்கொள்ள வேண்டிய மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவில்லை. | சுகாதாரத் தொழிலாளர்களுக்கு வருடாந்தம் உரிய மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும் | பணியாட்களுக்கான மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| (ii) | தேசிய கொள்கைகளின்படி திண்மக்கழிவுகள் தரம் பிரிக்கப்படாது சேகரிக்கப்படுகின்றன. | திண்மக்கழிவுகள் தரம் பிரிக்கப்பட்டு சேகரிக்கப்படல் வேண்டும். | எதிர்காலத்தில் முழுமையாக தரம் பிரித்து சேகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | சுகாதாரத் தொழிலாளிகளிற்கு சுகாதார பாதுகாப்பு அங்கிகள் வழங்கப்படாமையானது தொழிலாளர்களின் சுகாதாரம் தொடர்பில் பிரதேச சபையானது கவனம் செலுத்த தவறியுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது. | சுகாதாரத் தொழிலாளிகளிற்கு சுகாதார பாதுகாப்பு அங்கிகள் வழங்கப்பட்டு கடமைகளில் ஈடுபடுத்தப்படல் வேண்டும். | உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

**(ஊ) சுற்றுச்சூழல் பிரச்சினைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| திண்மக்கழிவுகளை அகற்றுவதற்காக தெரிவு செய்யப்பட்டிருந்த பிரதேசத்தில் கொசுக்கள் நுளம்புகள் பரவுவதனை தடுப்பதற்காக கொசு எண்ணெய் அடித்தல் மற்றும் துர்நாற்றத்தை தடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | தடுப்பதற்கான உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | நடவடிக்கைகள் எதிர் காலத்தில் மேற்கொள்ளப்படும். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | சேவைப்பெறுநர் பட்டயத்திற்கு முரணாக 45 விண்ணப்பதாரர்களுக்கு கட்டடம் அமைத்தலுக்கான அனுமதி 01 தொடக்கம் 05 மாதங்கள் தாமதமாக வழங்கப்பட்டுள்ளது. | பொதுமக்களிற்கான சேவைகள் உரிய காலத்தில் வழங்கப்பட வேண்டும். | உரிய காலத்தில் பொது மக்களுக்கான சேவைகள் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| (ஆ) | பிரதேச சபைக்கு சொந்தமான வீதி உருளை (Roller) 01 ஆண்டுகளுக்கு மேலாக வாடகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | உருளை வாகனம் வாடகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். | வீதி உருளை வாடகைக்கு கோரப்படும் பட்சத்தில் அதனை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| (இ) | வருடாந்தம் சபையினால் சோலைவரி அறவிட்டுக்காக ஆதன உரிமையாளர்களுக்கு K படிவம் வழங்கப்படல் வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் 2018 ஆம் ஆண்டில் 3,085 ஆதனங்களுக்கு K படிவம் விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்தம் அனைத்து ஆதன உரிமையாளர்களுக்கும் K படிவம் வழங்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் முழுமையாக விநியோகிக்கப்படும் |

### 3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையானது உரியவாறு மனித வளத்தைப் பெற்று ஈடுபடுத்தாமையினால் 12 மனிதவளங்களினால் நிறைவேற்றப்பட வேண்டிய சேவைகள் தாமதமடைந்துள்ளன. | பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.4.1 சொத்துக்களை பதிவேட்டிற்கு உட்படுத்தாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபையின் பயன்பாட்டில் உள்ள் 05 வாகனங்களை வாகனப் பதிவேட்டில் பதிவதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | வாகனப் பதிவேட்டில் வாகனங்களின் உரிமையினை பதிவதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். | குறித்த 03 வாகனங்கள் சபையின் வாகனப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது. |

#### 3.4.2 பராமரிப்பு மற்றும் திருத்தங்களினை மேற்கொள்ளத் தவறியமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபையினால் பயன்படுத்தப்படுகின்ற திருத்தம் செய்யக்கூடிய 06 வாகனங்கள் 03 ஆண்டுகளுக்கு மேலாக திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | திருத்தம் செய்யக்கூடிய வாகனங்களினை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

#### 3.4.3 வருடாந்த பொருள் மெய்மையாய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வருடாந்த பொருட்கணக்கெடுப்பின் பின்னர் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் போது 49 எண்ணிக்கையான பொருட்களுக்கு சரியான விலை நிர்ணயிக்கப்படாமையினால் ஏலத்தில் விற்பனை செய்யப்படவில்லை. | உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். | ஏலத்தில் எடுக்க எவரும் முன் வரவில்லை. மீள் மதிப்பீடு செய்ய கோரப்பட்டுள்ளது. |

### 3.5 பெறுகை

#### 3.5.1 பெறுகைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான பெறுகைள் திட்டமானது பிரதேச சபையினால் வழங்கல்கள் மற்றும் சேவைகள் செயற்பாடுகளுக்காக தயாரிக்கப்பட்டிருக்க வேண்டும். இருந்த போதிலும் சேவைகளுக்காக பெறுகை திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகைள் திட்டமானது அனுமதிக்கப்பட்ட மாதிரிக்கமைவாக தயாரிக்கப்படல் வேண்டும். | சேவைகளுக்கான பெறுகைத்திட்டம் எதிர்காலத்தில் தயாரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் ஆளுக்குரிய வரும்படிகள், பயணச்செலவுகள், மூலதனச் சொத்துக்களைப் பழுதுபார்த்தலும் பேணலும், ஏற்றியிறக்கல், தொடர்பிணைப்பு பயன்பாட்டுச்சேவை மற்றும் பிறசேவைகள், வட்டிக்கொடுப்பனவுகள், பங்குலாபங்கள், மிகையூதியங்கள், மானியங்கள், உதவுதொகைகள், உதவிப்பணங்கள், ஓய்வூதியங்கள், இளைப்பாற்று நயங்கள், பணிக்கொடைகள் போன்ற செலவினங்கள் சாதகமாகவும் வழங்கு பொருட்களும் தேவைப்பொருட்களும் செலவினம் பாதகமாகவும் காணப்படுகின்றன. | பாதீட்டினை சரியான முறையில் திட்டமிடுவதற்கான உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். | எதிர்காலத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் |